பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 15 | 31-08-94 | புதன்கிழமை | ஓசை 194

## மோட்டார் ஊர்தி வரிஅட்டை 10-ம் திகதிவரை பெறலாம்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மோட்டார் ஊர்திகளுக்கான 1994 ஆம் ஆண்டு வரி அட்டை பெற்றுக்கொள்வதற்கான காலஎல்லை நேற்றைய தினத்துடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் ஊர்தி உரிமையாளர்கள் ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் விசேடமாக இயங்கும் அலுவலகங்களில் வரி அட்டையைப் பெற்றுக்கொள்ளும் வசதிகருதி இதற்கான காலஎல்லை எதிர்வரும் 10-9 94 வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் 10-9-94ற்கு பின்னர் (6 ஆம் பக்கம் பார்க்க)

★ யுத்தநிறுத்தம் ★ பொருளாதாரத்தடை நீக்கம் ★ அரசியல் தீர்வு

# ஆயுதப்படை உயர் அதிகாரிகள் மட்டத்தில் கருத்தறியும்படி பிரதமர் சந்திரிகா பணிப்பு

## ஆட்சி மாற்றத்தை விரும்பாமல் ராணுவ சதிக்கு திட்டமிடப்பட்டதாம்

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றாலும், அதன் ஆட்சியை தொடருவதில் நாட்டம் கொண்ட இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் இராணுவ சதிப்புரட்சி ஒன்றுக்கு முயன்றதாக உயர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 17-ந் திகதி இவ் இராணுவச் சதிமுயற்சி மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டதாகவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் கைகளில் ஆட்சி செல்லக்கூடாது என குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகள் விரும்பியதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இச்செய்தி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்கா, இராணுவத்தளபதி ஜெரி டீசில்வா ஆகியோருக்கு தெரியவந்ததைத் தொடர்ந்து, அன்றைய தினம், இரவு அவர்கள் இராணுவ தலைமை அலுவலகத்துக்கு உடனடியாக வருகை தந்தனரென்றும், இச்சதித்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சதிப்புரட்சிக்காகவே சிசில் கொழும்பு வந்தாராம்

(கொழும்பு)

இராணுவ உயரதிகாரிகள் சிலர் மேற்கொண்ட சதிப்புரட்சியில் பங்குபற்றுவதற்காகவே முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா திடீரென நாடு திரும்பியதாக தெரிய வந்துள்ளது.

இம்மாதம் 18, 19ந் திகதிகளில் இராணுவ தொழில்நுட்ப அதிகாரி ஒருவரின் வீட்டில் வைத்து இரகசிய மகாநாடு ஒன்றையும் இவர் நடத்தியிருந்தார். இராணுவ சதிப்புரட்சியில் தொழினுட்ப பிரிவு தலைமை இராணுவ அதிகாரி லெப். கேணல் எம். ஆர். டபிள்யூ சொய்சா இராணுவத் தலைமை அதிகாரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன், ஜெரியைக் கொல்லவும் திட்டமாம்

ராணுவச்சதி குறித்து மேலும் தகவல்

## இராணுவத் தளபதியுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், அரசியல்தீர்வு ஆகிய முக்கிய மூன்று விடயங்கள் குறித்து, படை அதிகாரிகள் மத்தியிலும், உத்தியோகத்தர் மத்தியிலும் கருத்துக்களைச் சேகரித்து தமக்கு அளிக்கும்படி முப்படைத் தளபதிகளையும், பொலிஸ்மா அதிபரையும் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா பணித்துள்ளார். மேலும் இது தொடர்பாக நாளை முப்படைத் தளபதிகளையும், பொலிஸ் மா அதிபரையும் நேரடியாக சந்தித்துப் பேசவுள்ள அவர், அதன் முன்னோடி நடவடிக்கையாக இன்று இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவைச் சந்தித்துப் பேசவுமுள்ளார்.

இது குறித்து சண்டேலீடர் பத்திரிகையின் பாதுகாப்பு வட்டாரச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதாரத் தடை நீக்கம், நிபந்தனையுடன் கூடிய யுத்த நிறுத்தமா நிபந்தனையற்ற யுத்த நிறுத்தமா அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமா எனும் மூன்று விடயங்கள் குறித்த கருத்துக்களே படையினரிடையே சேகரிக்கப் படவுள்ளது.

இது குறித்து கருத்தறியும் முயற்சியில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பிராந்திய கமாண்டர்களையும் கட்டளை அதிகாரிகளையும் அவர்களின்கீழ் உள்ள படையினரிடையே கருத்து சேகரிப்பை மேற்கொள்ளப்பணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்ற பணிப்புகளை விமான, கடற்படை தளபதிகளும் விடுத்துள்ளனர்.

இதனிடையேநாளைமுதலாம் திகதி இதுகுறித்து விரிவாக ஆராயவென பிரதமர் சந்திரிகா பாதுகாப்பு அமைச்சில் மாநாடு ஒன்றை கூட்டவுள்ளது தெரிந்ததே

இம் மாநாட்டில் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபரைவிட வடக்கு-கிழக்கில் பணிபுரியும் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்

(6ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு இராணுவம் முட்டுக்கட்டை போடாது

## மர்மப் பொருள் வெடித்து

## மூன்று சிறுவர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

நிலத்தில் கிடந்த வாழைப் பொத்தி போன்ற பொருளை எடுத்து விளையாட்டாக சிறுவர்கள் நிலத்தில் குத்திய போது வெடித்துச் சிதறியது. இதில் மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்து யாழ் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மிருசுவில் பகுதியில் நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம் பெற்றது.

ஞானபாலன் றவிவர்மன் வயது - 14' ஞானச்சந்திரன் உதயகுமார் வயது - 05, பொன்னுத்துரை மயூரன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவச்சதி குறித்து மேலும் தகவல்

(கொழும்பு)

இராணுவ சதிப்புரட்சியின் போது, இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவையும் கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இத்திட்டத்தின்படி, ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவு ், இரா

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயர் அதிகாரி பேட்டி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு இறுதித் தீர்வு என்பது அரசியல் ரீதியாக மட்டுமே ஏற்படுத்த முடியும். இந்த விடயத்தை யாரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என இராணுவ நடவடிக்கைக் குழு தலைமை அதிகாரி தெரிவித்துளளார்-

நேற்று லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியின் போது அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு இராணுவத்தினர் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்க மாட்டார்கள். வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமாதான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்றே இராணுவமும் விரும்புகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாக இராணுவத்தினரிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தி குறித்து நான் கவலைப்படுகிறேன். இது குறித்து எந்தவித கருத்து வேறுபாடும் இராணுவத்

(6ம் பக்கம் பார்க்க)

## பேயாடி கூழாங்குளத்தில் படையினர் மீது தாக்குதல்

### ஏழு இராணுவத்தினர் காயம்

(கொழும்பு)

வவுனியா மாவட்ட பேயாடி கூழாங்குளம் இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகள் கடந்த 28 ஆம் திகதி நடத்திய தாக்குதலின் போது பல இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் காலையிலும் மாலையிலும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராய்ட்டர் செய்தியாளர் யாழ். வருவதற்கு தடை?

(வடமராட்சி)

யாழ். வரவிருந்த 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் குழுவினரின் பயணம் இறுதி நேரத்தில் அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது. இப்பத்திரிகையாளர்குழு யாழ் வருவதற்கு அரசிடம் அனுமதி பெற்று இங்கு புறப்படவிருந்தபோது இறுதியில் அனுமதி மறுக்கப் ட்டதால் இக்குழுவினர் யாழ். வர முடியவில்லை.

எனினும் இக்குழு யாழ். வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

## சமாதானபேச்சிற்கான சூழ்நிலையை ராணுவ தாக்குதல்கள் சீர்குலைக்கும்

### -சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள், சமாதான பேச்சுவார்த்தைக்கான சூழநிலையைச் சீர் குலை பது ன். வடக்கில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் பல இராணுவத்தினர் கொல்லப்படவும் வழிவகுக்கும். இவ்வாறு சிறிலங்காப் பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காகூறியுள்ளார்.

ரஷ்யாவிலிருந்து ஆயுதங்கள் முன்னைய அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக கருத்து தெரி த்த அவர் மேலும் கூறுகையில் இராணுவத் துறையில் நிபுணர் என்றில்லாதபோதும் பிரச்சினைக்குரிய உள்ளூர் விவகாரங்களில் அரசியல் லாபம் தேட தாம் முற்படப் போவதில்லை எனவும், இவ்வேளையில் இராணுவ நடவ

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரிபடகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

## விசேட கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக சங்கங்களின் நிர்வாகசபை உறுப்பினர்கள் நாளை வியாழக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு அரசியல் துறை யாழ். மாவ

(6ம் பக்கம் பார்க்க)

## 'மாகோ'வில் வந்த சீனி நிறை அளவிடப்படுகிறது

மாகோ கப்பலில் ஏற்றிவரப்பட்ட சீனியை அளவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஏற்றிவரப்பட்ட சீனி மூடைகளில் மூடைக்கு சுமார் பத்து கிலோ கிராம் வீதம் சீனி குறைவாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

இரு பகுதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட சீனி மூடைகளில் ஒரு பகுதி மூடைகளிலேயே சீனி குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்

(6ம் பக்கம் பார்க்க)

## 40 மில்லியன் ரூபாவுக்கு சொகுசு வாகன இறக்குமதி

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கு முன்னர் வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பல சொகுசு வாகனங்கள் மீளக் கோரப்பட்டுள்ளதாக, இலங்கை வழங்கல் திணைக்களங்கள் அறிவித்துள்ளன.

பொதுத் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் இவை, 75 சதவீத சுங்கத்தீர்வையின் கீழே இறக்குமதி செய்யப்பட்டதாகவும், இந்தப் பணத்தில் 28 பஸ்களை இறக்குமதி செய்திருக்கலாம் எனவும் மொத்தம் 40 மில்லியன் ரூபாவுக்கு இவை இறக்குமதி செய்யப்பட்டதாகவும் சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மீனவரை நோக்கி டோறா தாக்குதல்

(வடமராட்சி)

வ வெட்டித்துறை ஆதி கோவிலடி கடற்பிராந்தியத்தில் ரோந்து சென்ற கடற்படையினர் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் மீது கடும் பீரங்கித் தாக்குதலை நடாத்தினர்.

கடற்படையினரின் இத் தாக்குதல் சம்பவம் நேற்று காலை 5.00 மணியளவில் நடைபெற்றது.

தொழிலில் ஈடுபட்டிருந்த

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் அரசாங்கம் பேசுவதை இந்தியா விரும்பவில்லையாம்

### கொழும்புப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

புதிய வெகுஜன ஐக்கிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொள்வதை இந்திய அரசு அதிகமாக விரும்பமாட்டாது. இந்திய அரசியல் மற்றும் பாதுகாப்பு தலைவர்கள் கொழும்பு விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளும் எந்த சமாதான தொடர்புகளையும் எதிர்த்து வருகின்றனர் என சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் நீரோட்டத்தில் விடுதலைப் புலிகள் இணைவது தனது தென்பகுதி பாதுகாப்பிற்கு ஆபத்தானது என புதுடில்லி உணர்கிறது. சந்திரிகா குமாரணதுங்கா அரசினுள் இருக்கும் சிலர் கூட இந்தியா, இராணுவ நடவடிக்கையை புலிகளுக்கெதிராக சிறிலங்கா அரசு தொடர்ந்து மேற்கொள்ளவே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அழுத்

(6ம் பக்கம் பார்க்க)

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்திய சேவை

வயிற்றுப்புண், இருதய சுவாச வியாதிகள், வாதம், வலிப்பு, மாதவிடாய் கோளாறுகள், மகப்பேறின்மை, மூல, மூத்திர, தோல் வியாதிகள், Digital Electronic பரிசோதனைகளும் சிறந்த சிகிச்சையும் என பெயர் பெற்றது. இரெட்ணம் வைத்தியசாலை 129. ஸ்ரேஷன் றோட் யாழ்ப்பாணம். (9233)

### வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

Prof.T.சத்தியதாஸன் கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சிவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)

### ஜெயா அழகு மாடம்

விற்பனை அகமும் காட்சி அகமும் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகிறோம் (சி-10159)

### லொறி என்ஜின் கெட்

22 சிறி BMC லொறி ''என்ஜின் கெட்'' புதியது விற்பனைக்குள்ளது.

''மில்க்வைற்''
(சி-10203)

### ஆண்டு 3, 4, 5,

ஆண்டு 3, ஆண்டு 4 இற்கு புலமைப் பரிசில் அடிப்படையில் மாதந்தோறும் வெளியிடப்படும் வினாத் தாள்களையும் பிரபல பாடசாலைகளுக்குஅனுமதிக்கான ஆண்டு 5ற்கான மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன- புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9238)

### தவறிவிட்டது

---

தவறாது
நல்லூருக்கு
வாருங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன
கண்காட்சியைப்
பாருங்கள்

## பரிசுப் போட்டி ஒன்று காத்திருக்கிறது!

உங்களுக்கு
பெறுமதி மிக்க பரிசுகள்
கிடைக்கும்!

போட்டி விபரங்கள்
கண்காட்சி வாசலில்

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

(சி 10213)

---

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ் /ஆனைக்கோட்டை அ மி த க பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்;-

1 ஆம் பரிசு இல. 1930
2 ஆம் பரிசு இல. 3951
3 ஆம் பரிசு இல. 2060

10 ஆறுதல்பரிசு இலக்கங்கள்
(1) 2603. (2) 1345
(3) 4170 (4) 2493
(5) 1662 (6) 246
(7) 2392 (8) 2842
(9) 847 (10) 96

முக்கிய குறிப்பு;
அதிர்ஷ்டலாபச் சீட்டுடன் 5-9-1994 இன் பின் பாடசாலைக் காரியாலயத்தில் பரிசைப் பெற்றுக்கொள்ளவும்

(9241) -நிர்வாகம்.

---

மனைப் பொருளியலும்
கைத்திறனும்

## மகளிருக்கான டிப்ளோமா பயிற்சி

★ கேக் ஐசிங்
★ உடை தயாரித்தல்
★ உணவு தயாரித்தல்

---

# மணம் செய்து கொள்ளும் அகதிகளுக்கு நிதியுதவி

### அமைச்சர் அஷ்ரப் அறிவிப்பு

(கொழும்பு)

இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்வோர் இல்லற வாழ்க்கையில் பிரவேசிக்கும் போது சுய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து வருமானம் பெற நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை துறைமுகங்கள் கப்பல் துறை புனர்வாழ்வு அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப் வகுத்துள்ளார்.

அகதிகளாக உள்ளோரில் ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்யும் போது சுய தொழில் முயற்சிக்கென இருபதாயிரம் ரூபா ஒதுக்கப்படும் அகதியானஓர் ஆணோ பெண்ணோ அகதியல்லாத ஓர் பெண்ணை அல்லது ஆணை மணமுடித்தால் சுய தொழில் முயற்சிக்கென பத்தாயிரம் ரூபா ஒதுக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கென நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் ஒரு நிதி ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டம் குறித்து அமைச்சர் அஷ்ரப் பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவிடம் கடந்த 26ஆம் திகதி எடுத்துக் கூறிய போது அவரும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் அஷ்ரப் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள அகதி முகாம் ஒன்றுக்கு (வியாழன் இரவு) விஜயம் செய்து அங்கு நடந்த ஒரு திருமண வைபவத்திலும் கலந்து கொண்டபோது இந்த சுய முயற்சி தொழிலுக்கான நிதி உதவி திட்டம் பற்றி அறிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் இந்த முகாமில் உள்ளனர். அமைச்சர் கலந்து கொண்ட இந்த முகாம் திருமணத்தில் மணமகன் விமானத்தாக்குதலில் இடது காலை இழந்து பொய்க்காலுடன் நடமாடுபவர். இவர் சுய தொழில் முயற்சியில் ஈடுபட சாதனங்களை வழங்கவும் அமைச்சர் ஏற்பாடு செய்தார்.

---

## வித்தியாலயம் கல்லூரியானது

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரின் 5-7-94ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரமே மேற்படி பாடசாலையின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## நூல் வெளியீடு

வேதமுரசு நூல் வெளியீடு நாளை காலை 11 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

---

## 16-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு
06-09-1931



இறப்பு
16-08-1994

---

## நினைவு கூருகின்றோம்...

### 31. 08 1994 .

1985-ம் ஆண்டு இதேதினத்தில் தேசவிரோதசக்திகளினால் வெட்டிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**இராசையா மோகன்** (6-ம்கட்டை, விளாங்குளம்-திருமலை)

1988-ம் ஆண்டு மட்டு- வண்ணாத்தியாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ரமேஸ்** (தம்பிராசா சோமசுந்தரம்- வேப்பவெட்டுவான், செங்கலடி - மட்டு)

யாழ் - கோண்டாவில் - காரைக்கால் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**செந்தில்** (பாலசுப்பிரமணிய தேசிகர் செல்வச்செந்தில்-கோப்பாய்தெற்கு - யாழ்)

1990-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ராஜா** (அமிர்தலிங்கம் சிவயோகநாதன்- கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**லெப். அன்பு** (தியாகராசா சிறிகாந்தன்- முள்ளியவளை - மணலாறு)

**கவி** (அந்தோனிப்பிள்ளை அருள்நாயகம் - ஆலையடி, திருநகர் - கிளிநொச்சி)

**சீனு** (தோமாசிங் சேர்ச்சில் - 4ம் வட்டாரம், நெடுந்தீவுமத்தி)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்காவிமானப் படையினரின் விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஆனந்தன்** (முத்துக்கிருஷ்ணன் குணாளன் - புளியங்கூடல் - ஊர்காவற்துறை)

1992-ம் ஆண்டு ஆனையிறவு - தட்டுவான்கொட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் திடீரென ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அன்பழகன்** (கந்தையா சசிக்குமார் - திருநகர் - கிளிநொச்சி)

1993-ம் ஆண்டு யாழ் - மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**கப்டன் இரும்பொறை / ஆதி** (இராசையா ஜெகதீஸ்வரன் - ஸ்ரேசனடி, கோண்டாவில் - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை - இந்தியப்படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10210)

---

## தமிழீழத்தின் முதற் பெண் கடற் கரும்புலிக்கு 15-ம் நாள் நினைவஞ்சலி

ராசம்மான் கிருஜா என்பவருடைய கைச் சங்கிலி பொற்பதி வீதி நடுவப் பணியகத்திற்கும், பிள்ளையார் கோவிலுக்குமிடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(9239)

## தவறிவிட்டது

ஆறுமுகம் குணசேகரம், குணசேகரம் குஞ்சுமணி (52171127X 526713036X) என்பவர்களுடைய அடையாள அட்டையும், வவுனியா-ஓமந்தை அனுமதி அட்டையும் வடலியடைப்பு-மானிப்பாய்க்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(9240)

## அதிபர்கள் வகுப்பு

கல்வி நிர்வாக சேவை, அதிபர்கள் பரீட்சைக்காக வகுப்பொன்று தென்மராட்சி அதிபர்கள் சங்கம் எதிர் வரும், ஞாயிறு காலை 8.45 மணிமுதல் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

## வள்ளுவர் விழா

திருவள்ளுவர் மன்றத்தின் வள்ளுவர் விழா எதிர்வரும் 9-ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை உரும்பிராயில் நடைபெறவுள்ளது. இரவு நிகழ்ச்சிகளாக உரையரங்கு, இசையரங்கு, கவியரங்கு என்பன இடம்பெறும்.

★ உணவு தயாரித்தல்

★ கை வேலை

★ பூ வேலை

★ பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

★ மேற்படி டிப்ளோமா பயிற்சி பயில்வோருக்கு இலவசகூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.

★ கிழமை நாள் வகுப்புகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும்.

**ஆரம்பம்: 07 - 09 - 1994**

★ சனி, ஞாயிறு பிரிவினருக்கான வகுப்புகள் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

**ஆரம்பம்: 10 - 09 - 1994**

பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்,

**மேலும் விவரங்களுக்கு:**

**நேரில் வரவும்!**

# கலாலயா

**(தொழிற் பயிற்சியகம்)**

**விக்ரோரியா வீதி, யாழ்நகர்.**

**[ஆஸ்பத்திரியின் பின்புற வீதி]**

(சி-10211)

## அமரர் பொன்னம்பலம் கந்தசாமி

இவரது இல்லத்தில் 31-08-1994 புதன்கிழமை இன்று நடைபெறும் கிரியைகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். நன்றி

''அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்''.

மகேந்திரா வீதி,
பூதர்மடம், கோப்பாய் வடக்கு,
கோப்பாய், - குடும்பத்தினர்

(9246)

## 1-ம் ஆண்டு நினைவு



பிறப்பு
31-12-1973

வீரச்சாவு
31-08-1993

**கப்டன் இரும்பொறை (ஆதி)**

**(இராசையா ஜெகதீஸ்வரன்)**

தையிட்டி, காங்கேசன்துறை

சீறி வரும் சிங்களப் படையை
கூறு போட்டு அழித்திடவே
வீறு கொண்டெழுந்து வேங்கையாகி கப்டன்
இரும்பொறையாகி வித்தாகிவிட்டாய்
வீரம்செறி மண்ணிலே!

கொக்குவில்
நந்தாவில்

பிரிவுத் துயரத்தால் வாடும்
குடும்பத்தினர்

(9243)

## 13-ம் நாள் நினைவஞ்சலி



**கப்டன் அங்கயற்கண்ணி**

**(துரைசிங்கம் புஸ்பகலா)**

நீ பெண்ணினத்திற்கு வழிகாட்டி.... ........!
கடலில் கட்டளைப்படகை
தகர்த்த போது அலைகள்...........
உன் பெயரைச் சொல்லி ஆர்ப்பரித்தன!

- வடமராட்சி கிழக்கு
கடற்றொழிலாளர்
ஒன்றியம்

(9244)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# மாணவர் அரங்கு

## விஞ்ஞானம் O/L

### பகுதி A
### மீளும் தாக்கங்களும் இரசாயன சமநிலையும்

1. அனேகமான இரசாயனத்தாக்கங்கள் ஒரு திசைக்கே நடைபெறுவனவாக உள்ளன. இவை மீள எதிர்த்திசையில் நடைபெறுவதில்லை. எனவே தாக்கிகளை மீளப்பெறமுடியாது.

உ+ம் மக்னீசியம் ஒட்சிசனுடன் தாக்கம் புரிந்து மக்னீசியம் ஒக்சைட்டைக் கொடுக்கும்.

$$2Mg + O_2 \rightarrow 2MgO$$

இங்கு MgO வை வெப்பப்படுத்த mg, $O_2$ வாக பிரியாது.

2. சில தாக்கங்கள் எதிர் எதிர் திசையில் நடைபெறும் இவையே மீளும் தாக்கங்கள் ஆகும்.

உ+ம் $Hg + O_2 \xrightarrow{\Delta} HgO$

இனி $HgO \xrightarrow{\Delta} Hg + O_2$ இங்கு தாக்கம் எதிர்த்திசையில் நடைபெறுவதனால் தாக்கியை மீளப்பெற முடிகிறது.

3. மாணவர் தெரிந்திருக்க வேண்டிய சில மீளும் தாக்கங்கள்

1. $2Hg + O_2 \rightleftharpoons 2HgO$
2. $CaO + CO_2 \rightleftharpoons CaCO_3$

(செஞ்சூடான இரும்பில் நீராவியை தாக்கமுற செய்தல்)

3. $3Fe + 4H_2O\,(g) \rightleftharpoons Fe_3O_4 + 4H_2$
4. $N_2O_4 \rightleftharpoons 2NO_2$
5. $N_2 + 3H_2 \rightleftharpoons 2NH_3$

4. மீளும் தாக்கங்களில் முதலில் நடைபெறும் தாக்கம் முன்முகத் தாக்கம் ஆகும். எதிராக நடைபெறும் தாக்கம் பின்முகத் தாக்கமாகும்.

உ+ம் $Hg + O_2 \rightleftharpoons 2HgO$ இத்தாக்கத்தில்

$Hg + O_2 \rightarrow HgO$ முன்முக தாக்கம் ஆகும்;

$Hg + O_2 \leftarrow HgO$ பின்முகத் தாக்கமாகும்.

(5) மீளும் தாக்கங்களில் முன்முகத் தாக்கத்தின் விளைவு பின்முகத்தாக்கத்திற்கு தாக்கியாகும். இவ்வாறு பின்முகத்தாக்கத்தின் விளைவு முன்முகத் தாக்கத்திற்கு தாக்கியாகும்.

(6) மீளும் தாக்கங்களில் வாயு விளைவு தோன்றினால் அம்மீளும் தாக்கம் மூடிய தொகுதியில் நடைபெறும் பொழுதே முன்முகத்தாக்கமும் பின்முகத்தாக்கமும் நடைபெற வாய்ப்பு உண்டாகும்.

(7) ஆரம்பத்தில் முன்முகத்தாக்க வீதம் கூடவாகவும் பின்முகத்தாக்க வீதம் குறைவாகவும் இருக்கும். ஏனெனில் முன்முகத்தாக்கத்தில் தாக்கியின் செறிவு கூடவாக இருப்பதனால் அதன் முன்முகத் தாக்க வீதம் கூடுகிறது. பின்முகத்தாக்கத்தில் தாக்கியின் செறிவு குறைவானகயால் பின்முகத்தாக்க வீதம் குறைவாக இருக்கும்.

(8) நேரம் செல்லச்செல்ல முன்முகத்தாக்க வீதம் குறைய பின்முகத்தாக்க வீதம் அதிகரித்து ஒரு நிலையில் முன்முகத்தாக்க வீதம் பின்முகத்தாக்க வீதத்திற்கு சமனாகும். இந்நிலையில் மீளும் தாக்கம் சமநிலையில் உள்ளது எனப்படும்.

(9) மீளும் தாக்கச் சமநிலையைப் பாதிக்கும் காரணிகள் ஆவன

(1) வெப்பநிலை (2) அமுக்கம் (3) PH பெறுமானம்

★ ஊக்கி மீளும் தாக்க சமநிலையைப் பாதிப்பதில்லை.

(10) வெப்பநிலை மீளும் தாக்கச் சமநிலையைப் பாதித்தல்.

(அ) எல்லா மீளும்தாக்க சமநிலையையும் வெப்பம் பாதிக்கும் ஆனால் ஒரே மாதிரிப் பாதிப்பதில்லை.

(ஆ) i அகவெப்ப மீளும் தாக்கங்களில் வெப்பத்தைக் கூட்ட விளைவு கூடும்

ii புறவெப்ப மீளும் தாக்கங்களில் வெப்பத்தைக் கூட்ட விளைவு குறையும்.

(இ) $N_2O_4 \rightleftharpoons 2NO_2$ இவ் மீளும் தாக்கத்தில் வெப்பத்தைக் கூட்ட முன்முகத்தாக்கம் அதிகரிக்கும் $NO_2$ வின் செறிவு கூடி கபிலநிறம் அதிகரிக்கும்

(ஈ) $N_2 + 3H_2 \rightleftharpoons 2NH_3$ இதில் வெப்பத்தைக் கூட்ட முன்முகத்தாக்க வீதம் குறையும் எனவே எல்லா மீளும் தாக்கச் சமநிலையையும் வெப்பம் ஒரே மாதிரிப் பாதிப்பதில்லை.

(11) அமுக்கம் மீளும் தாக்கச் சமநிலையைப் பாதித்தல்.

(அ) அமுக்கம் எல்லா மீளும் தாக்கங்களின் சமநிலையையும் பாதிக்காது. தாக்கியும், விளைவும் வாயுவாக உள்ள மீளும் தாக்கங்களின் சமநிலையையே பாதிக்கும்.

(ஆ) அமுக்கத்தைக் கூட்டும் பொழுது மூலக் கூறுகள் கூடிய பகுதியில் இருந்து மூலக் கூறு குறைந்த பகுதியை நோக்கி தாக்கம் நகர சமநிலை குழப்பப்படும்.

உ+ம் I $N_2O_4 \rightleftharpoons 2NO_2$ இம் மீளும் தாக்கத்தில் அமுக்கத்தைக் கூட்ட மூலக்கூறு கூடியபகுதியில் உள்ள $NO_2 \rightarrow N_2O_4$ ஆகமாறும் இதனால் பின்முகத் தாக்க வீதம் கூடி சமநிலை குழம்புகிறது.

குறிப்பு;- இங்கு கபிலநிறம் மங்கத் தொடங்கும் (ஆனால் கபிலநிறம் கூடிப் பின் குறைவதை காணலாம்)

உ+ம் II $N_2 + 3H_2 \rightleftharpoons 2NH_3$ இம் மீளும் தாக்கத்தில் அமுக்கத்தைக் கூட்ட மூலக்கூறு கூடிய பகுதியில் உள்ள (1 $N_2$ மூலக்கூறும் $3H_2$ மூலக்கூறும் ஆக மொத்தம் 4 மூலக்கூறுகள்) $N_2$ம் $H_2$ம் $NH_3$ யாக மாறும் இங்கு முன்முகத்தாக்க வீதம் கூடுவதை அவதானிக்கலாம்.

### பகுதி B
### கழிவகற்றலின் தொடர்ச்சி

| விலங்கு | காபன் கழிவங்கம் | நைதரசன் கழிவங்கம் |
|---|---|---|
| எலி (முலையூட்டிகள்) மண்புழு | சுவாசப்பை | சிறுநீரகம் |
| | தோல் | கழிநீரகம் |
| எறும்பு | புன்வாதனாளி | மல்பீசியன் குழாய் |

வியர்வை

1 தோலில் வியர்வைச் சுரப்பிகள் உண்டு. இவை குருதியில் உள்ள உப்புக்களையும் நீரையும்வடித்து வியர்வையாக வெளியேற்றுகிறது.

2 வியர்வை வெளியேறுவதனால் சிலஅனுகள் எமக்கு ஏற்படுகின்றன அவற்றில்

1 கழிவகற்றல்

2 உடல் வெப்பநிலையைச் சீராக்கல்

தோலின் தொழில்கள் ஆவன:-

(1) உள்ளே உள்ள உயிருள்ள இழையங்களை பாதுகாத்தல்

(2) கழிவகற்றல்

(3) வெப்பநிலையைச் சீராக்கல்

(4) வாங்கி அங்கமாக தொழிற்படல்

(5) விற்றமின் Dஐ தொகுத்தல்

#### இயைபாக்கமும் சமநிலையும்
#### வினா - விடை

(1) அங்கி என்று நாம் எதைக் கருதுகிறோம்?

உயிரினங்களை (தாவரம் / விலங்கு உட்பட)

(2) சூழல் என்றால் என்ன?

அங்கிகள் வெற்றிகரமாக வாழும் இடம் அவற்றின் சூழலாகும்

(3) தூண்டல் என்றால் என்ன?

சூழலில் ஏற்படும் மாற்றம் தூண்டல்கள் ஆகும்

(4) எமது சூழலில் ஏற்படும் சில தூண்டல்களைத் தருக?

வெப்பம், குளிர், தொடுகை, நோவு. ஒளி, ஒலி, சுவை மணம்

(5) வாங்கி அங்கம் என்றால் என்ன?

சூழலில் ஏற்படும் மாற்றங்களை (தூண்டலை) உணரும் அங்கம் வாங்கி அங்கம் ஆகும்

(6) எமது உடலில் காணப்படும் வாங்கி அங்கங்களையும் அவற்றால் உணரப்படும் தூண்டல்களையும் தருக?

| வாங்கி | உணரப்படும்தூண்டல் |
|---|---|
| கண் | ஒளி |
| காது | ஒலி |
| நாக்கு | சுவை |
| மூக்கு | மணம் |
| தோல் | வெப்பம், குளிர், தொடுகை, நோவு |

(7) எம்மால் உணரமுடியாத தூண்டல்கள் எவை?

1 X - கதிர் (X-Ray)

2 வானொலி அலை

(8) துலங்கல் என்றால் என்ன?

தூண்டலிற்கு அங்கி காட்டும் தோற்றப்பாடு துலங்கலாகும்

(9) துலங்கல்கள் எவற்றால்ஏற்படுத்தப் படுகின்றது? அவை எவை?

விளைவு காட்டிகளால், தசைகளும் சுரப்பிகளும் (விலங்குகளில்)

(10) எம்மில் துலங்கலிற்கு காரணமான இரு தொகுதிகள் எவை?

1 நரம்புத் தொகுதி

2 அகஞ்சுரக்கும் தொகுதி (கானில் சுரப்பிகளின் தொகுதி)

(11) நரம்புத் தொகுதியால் ஏற்படுத்தப்படும் துலங்கல்களில் வாங்கியில் இருந்து என்னத்தின் ஊடாக என்ன முறையில் விளைவு காட்டிக்கு செய்தி அனுப்பப்படுகிறது?

1 நரம்புகளின் ஊடாக

2 ''கணத்தாக்கம்'' என்னும் மின்னிரசாயனப் பொறி முறையால்.

சு. அருள்நேசன்

(12) வாங்கியங்கத்தில் இருந்து விளைவு காட்டிக்கு கணத்தாக்கம் செல்லும் பாதையை விபரிக்க?

வாங்கியங்கத்திலிருந்து உட்காவு நரம்பு (புலன் நரம்பு) ஊடாக மைய நரம்புத் தொகுதிக்கு சென்று வெளிக்காவு நரம்பு (இயக்கநரம்பு) ஊடாக விளைவு காட்டியை அடையும்.

(13) மைய நரம்புத் தொகுதி எப்பகுதிகளைக் கொண்டது?

மூளையையும் முண்ணானையும் கொண்டது

(14) மூளையின் திண்ம நோக்கில் நீர் அவதானிக்க கூடிய பகுதிகளையும் அவற்றின் தொழில்களையும் தருக?

மூளையம் - (1) புலன் உணர்வுகளைஅறிதல்;
(2) விவேகம்.
(3) ஞாபகசக்தி.
(4) தீர்மானங்களை எடுத்தல்.

மூளி - தசைகளின் தொழிற்பாட்டைக்கட்டுப்படுத்தி உடற்சமநிலையைப் பேணல்.

நீள்வளைய மைய விழையம் - உடலின் உள்ளுறுப்புகள் (இதயம் சுவாசப்பை) போன்றவற்றின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்தல்.

(15) மூளையை பாதுகாக்கும் பகுதிகள் எவை?

1. மண்டை ஓடு
2. வன்றாயி ]
3. மென்றாயி ] மென்சவ்வுகள்.
4. சிலந்தி வலையுரு மென்சவ்வு]
5. மூளைய முண்ணான் பாய்பொருள்.

(பகுதி B தொடரும்) (4-ம் பக்கம் பார்க்க)

## கணிதம்

(இ)

$$S = 0.996 \times 3\sqrt{8.017} \;/\; \sqrt{15.98}$$

$$= \bar{1}.9983 + \tfrac{1}{3} \times 0.9040$$

$$\overline{\quad 10 \quad}$$

$$\tfrac{1}{2} \times 1.2036$$

$$10$$

$$= \bar{1}.9983 + 0.3013$$

$$10$$

## சித்திரம் O/L
### இரேக்க ஓவியங்களும் சிற்பங்களும்

கிரேக்க ஓவியம் எகிப்திய ஓவியத்திலிருந்து

வகையான ரேகைகள் காட்டப்பட்டுள்ளது (4) முக்கோணச் சிலை (PedimentGoble) கிமு 5ஆம்நூற்றாண்டிற்கு உரியது சமயக் கோயில் முகட்டுச் சுவரி உ. முக்கோண வடிவில் சிலைகள் உருவ ாகி உள்ளன அதினா தெய்வம் நடுவிலும், இருபக்கங்களிலும்யுத்த வீரர்கள் இருவர் அரை நிர்வாணத்துடன் முழந்தாழிட்டு நிற்கின்றனர். கிரேக்க பாதினன் கோயிலில்இவ்வகைச் சித்திரங்களும் சிலைகளும் உண்டு.

(5) சிற்பங்களை உருவாக்குவதில் மைரன் சிறந்து

# கணிதம்

**22-08-94 இல் மாணவர் அரங்கிலே வெளியான கணித வினாக்களுக்கான உதவி விடைகள்**

1.

(அ) $x^2+x-a^2-a$
$= (x^2-a^2)+x-a$
$= (x+a)(x-a) + (x-a)$
$= (x-a)(x+a+1)$

(ஆ) $x + 2y = 3$ ---- (1)
$2x + 3y = 4$ ---- (2)
$(1)\times 2 \rightarrow 2x + 4y = 6$ ---- (3)
$(2) - (3) \rightarrow -y = -2$
$y = 2$
$y = 2$ ஐ சமன்பாடு [1]இல் பிரதியிட
$x + 2y = 3$
$x + 4 = 3$
$x = -1$
$\therefore x = -1,\ y = 2$

(இ) $x^2 - 4x + 2 = 0$
$x^2 - 4x = -2$
$x^2 - 4x + 2^2 = -2+4$
$(x-2)^2 = +2$
$x-2 = \pm\sqrt{2}$
$x = \pm 1.414 + 2$
$= 3.414$ அல்லது $0.586$
$= 3.41$ அல்லது $0.59$

2. (அ) $(2xy)^{-\frac{1}{3}}$
$= 2^{-\frac{1}{3}} \times 4^{-\frac{1}{3}} \times 27^{-\frac{1}{3}}$
$= 2^{-\frac{1}{3}} \times 2^{-\frac{2}{3}} \times (3^3)^{-\frac{1}{3}}$
$= 2^{-1} \times 3^{-1}$
$= \frac{1}{6}$

(ஆ) $2\,\text{மட}_{10}\, x = \frac{1}{3}\text{மட}_{10}\, 125 + \text{மட}_{10}\,(2x-5)$
$\text{மட}_{10}\, x^2 = \text{மட}_{10}\,(5^3)^{\frac{1}{3}} + \text{மட}_{10}\,(2x-5)$
$\text{மட}_{10}\, x^2 = \text{மட}_{10}\, 5(2x-5)$
$x^2 - 10x + 25 = 0$
$(x-5)^2 = 0$
$x = 5$

$= \bar{1}.9983 + \frac{1}{3}\times 0.9040$
10
$\frac{1}{2}\times 1.2036$
10
$= \bar{1}.9983 + 0.3013$
10
$0.6018$
10
$= 0.2996$
10
$0.6018$
10
$= \bar{1}.6978$
10
$= 0.4986$

3

(அ) அழிதல் – A, அழியாமை – B எனவும்எடுக்க.

| நகரம் | A | B |
|---|---|---|
| பக்தாத் | $\frac{4}{5}$ | $\frac{1}{5}$ |
| பஸ்ரா | $\frac{3}{5}$ | $\frac{2}{5}$ |
| நஸீரா | $\frac{2}{5}$ | $\frac{3}{5}$ |

மேற்படி தரவைக் கொண்டு மூன்று நகரங்களும் அழிதல், அழியாமை என்பவற்றைக்கொண்ட மரவரிப்படம் ஒன்றை வரைக.
மரவரிப்படத்தில் கிடைக்கும் பெறுபேறுகள்

(A, A, A) $\frac{24}{125}$
(A. A, B) $\frac{36}{125}$
(A, B, A) $\frac{16}{125}$
(A, B, B) $\frac{24}{125}$
(B, A, A) $\frac{6}{125}$
(B, A, B) $\frac{9}{125}$
(B. B. A) $\frac{4}{125}$
(B. B B) $\frac{6}{125}$

இங்கு முதலாவது பக்தாத், இரண்டாவது பஸ்ரா, மூன்றாவது நஸீரா நகரங்களைக் குறிக்கின்றது.

(ஆ) (1) $\frac{24}{125}$ (2) $\frac{82}{125}$ (3) $\frac{16}{125}$ (4) $\frac{119}{125}$

(இ) $\frac{24}{125} \times 100$
$= 19.2\%$
கூற்றுப் பொய்யானது

(4)

(1) $x = -1$ ஆக
$y = 4 + 2x - x^2$
$= 4 + 2\times -1 (-1)^2$
$= 4 - 2 - 1$
$= 1$

$x = 1$ ஆக
$y = 4 + 2x - x^2$
$= 4 + 2\times 1 - 1^2$
$= 4 + 2 - 1$
$= 5$

$x = 2$ ஆக
$y = 4 + 2x - x^2$
$= 4 + 2\times 2 - 2^2$
$= 4 + 4 - 4$
$= 4$

$x = 3$ ஆக
$y = 4 + 2x - x^2$
$= 4 + 2\times 3 - 3^2$
$= 4 + 6 - 9$
$= 1$

(2) ஒப்பமான வரைபொன்றினைவரைந்துகொள்க
(3) (அ) $y = 5$ (ஆ) $x = 1$ (இ) $-1.2 < x < 3.2$
(4) $x^2 + 4x + 1 = 4x + 4$
$x^2 - 3 = 0$
$-x^2 + 2x + 4 = y$
$2x + 1 = y$
$2x + 1 = y$ எனும் நேர்கோட்டை வரைந்தால் மூலங்களாக $-1.8$, $0.8$ பெறப்படும்.

1-ம் 2-ம் 4-ம் வினாக்களுக்கு

5.

(1) பருமட்டான படம் ஒன்றை வரைக
(2) PQ = 8.1 Cm ஆகநேர்கோட்டை அமைக்க
(3) $P\hat{Q}R = 45^\circ$ ஐ அமைக்க (பாகைமானிஉதவியின்றி)
(4) $Q\hat{P}S = 75^\circ$ ஐ அமைக்க ( ,, ,, )
$\triangle PQS$ பெறப்படும்.
(5) SQ ஐ விட்டமாகக் கொண்டு ஒரு அரைவட்டம் வரைக.
(6) அவ் வட்டப்பரிதியில் 7.4 Cm ஐக் குறித்து SR, QR ஐ இணைக்க. நாற்பக்கல் PQRS பெறப்படும்.
(7) RQ ஐ நீட்டுக.
(8) SQ க்கு சமாந்தரமாக P இன் ஊடாக ஓர் நேர் கோட்டை வரைக அது நீட்டப்பட்ட RQ ஐ T இல் சந்திக்கட்டும்.
இப்போ நாற்பக்கல் PQRS இன் பரப்பளவிற்குசமனான பரப்புடைய $\triangle RST$ பெறப்படும்
(3) (1) 5.1 Cm 2. $55^\circ$
(5) $\triangle PQS = \triangle QST$ (ஒரேஅடி, ஒரே ‖)
$\angle PQS + \triangle QRS = \triangle QST + \triangle QRS$
நாற் $PQRS = \triangle RST$

(தொடரும்)

**ல. சதீஸ்குமார்**
(ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி)

## கிரேக்க ஓவியங்களும் சிற்பங்களும்

கிரேக்க ஓவியம் எகிப்திய ஓவியத்திலிருந்து ஆரம்பமாகியது கிரேக்க ஓவியர்களுக்கு முழுச்சுதந்திரம் வழங்கப்பட்டது. கிரேக்க அதிகாரிகளின்தலையீடு இருக்கவில்லை. ஓவியம் வரைவதிலும் ஆலயம் கட்டுவதிலும சிலைகள் செய்வதிலும் தமது விருப்பப்படி செய்தனர். கிரேக்கர்கள் தனக்கே உரித்தான தனித்துவம் வாய்ந்த உத்தம அளவுவிகிதங்களும் பேரெழிலும். லயமும், ஒருமைப்பாடு அமைந்த உயர்ந்த ஓவிய கலையை தோற்றுவித்தனர். கிரேக்கர்கள் தெய்வங்களையும் பெண்தெய்வங்களையும் கோவிலின் போதிகையில் செதுக்கினார்கள் இவர்களே முதன்முதலில் நிர்வாண மனித உருவங்களையும் செதுக்கினார்கள். பீடியஸ், மைரன், பிரக்ஸ்சிற்றிலிஸ் விசிப்பஸ் ஆகியோர் சிறந்தசிற்பிகளாக இருந்தனர். (1) சமோலின் ஹேராக் சிலை (**Hera of Samos**) கி.மு 6ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. இதில் தலை உடைக்கப்பட்டுள்ளது. உடை சிறுஅலை ரேகைகளால் காட்டப்பட்டுள்ளது, (2) பரிதி வட்டம் வீசும் வீரன் இது மைரன் என்பவரால் செய்யப்பட்டது மனித உடலின் தசை நார்கள் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளது (3) யுத்தவாகன மோட்டி (**Chavioteer**) கி.மு 450 ஆண்டுகளுக்குரிய படைப்பாகும். கையில் வாள் கிமோனா உடை மேலிருந்து கீழ்வரை ஒரே

...னா தெய்வம் நடுவிலும், இருபக்கங்களிலும்யுத்த வீரர்கள் இருவர் அரை நிர்வாணத்துடன் முழந்தாழிட்டு நிற்கின்றனர். கிரேக்க பாதினன் கோயிலில்இவ்வகைச் சித்திரங்களும் சிலைகளும் உண்டு.

(5) சிற்பங்களை உருவாக்குவதில் மைரன் சிறந்து விளங்கினார். ஒலிம்பிக் வீரர்களை வடிவமைத்துள்ளார்

**திருமதி ஜெ. அம்பலவாணர்**
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
(தொலைக்கல்வி போதனாசிரியர்)

(6) லூட்டோவின் வடிவம் (**Ludovisi Relief**)
(7) பொலிக்கட்டஸ் (**Polyclitus**) இவர் மனித உடலை விஞ்ஞானரீதியில் வடிவமைப்பவர். ஈட்டி எறிதல், தலைமயிர் கட்டுண்ட இளைஞன் இவரின் படைப்பாகும்.
(8) பீடியஸ்- அதினா தெய்வம் இவரால் செய்யப்பட்டது. [தந்தத்தால்ஆனது]
(9) பிறக்ஸ்சிற்ரிலிஸ்- இவரின் சிறந்த சிலை உறம்ரஸ் சிலை ஆகும் இது இடது கையால் [இனொரு உருவத்தை] டியோனிஸரைத்தூக்கிக் கொண்டுஇருப்பதானது முழுநிர்வாண சிலை ஆகும்.
(10) எப்ரோடயிட்ஸ்சிண்டஸ் வீனஸ் சிலை மற்றும்கிரேக்க ஓவியர்கள் 1. பொலிக்னோடுஸ் 2. ஸியூக்லீஸ் இவர்கள் இருவரும் பிரதானமானவர்கள்ஸியூக்


[4ஆம் பக்கம் பார்க்க]

# விஞ்ஞானம் O/L

## பகுதி C

## பொறிகள் (கடந்த வாரத் தொடர்ச்சி)

சாய்தளத்தில்




சாய்தளத்தில்

AC - சாய்தள நீளம்
AB - சுமை உயரும் தூரம்
L - சுமை
E - எத்தனம்
Q - சாய்வுக்கோணம்

(1) உண்மை பொறிமுறை நயம் $= \frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$

$= \frac{L}{E}$

(2) அறிமுறைப் பொறிமுறை நயம் | வேகவிகிதம் $= \frac{\text{எத்தன இடப்பெயர்ச்சி}}{\text{சுமையின் இடப்பெயர்ச்சி}}$

$= \frac{AC \text{ (சாய்தள நீளம்)}}{AB \text{ [செங்குத்துயரம்]}}$

$= \frac{\text{செ.ப}}{\text{எ.ப}}$

$\left( \text{SIn } Q = \frac{\text{எ.பக்கம்}}{\text{செம்பக்கம்}} \text{ எனில் } \frac{\text{செ.பக்கம்}}{\text{எ பக்கம்}} = \frac{1}{\text{SinQ}} \right)$

ஃ $= \frac{1}{\text{SinQ}}$

(3) திறன் $= \frac{\text{பொ : மு : நயம்}}{\text{வேகவிகிதம்}} \times 100$


$= \frac{\frac{L}{E}}{\frac{AC}{AB}} \times 100$

$= \frac{L}{E} \times \frac{AB}{AC} \times 100 = \frac{100.LAB}{E.AC}$

### கப்பிகள்


1) தவாளித்த ஓரங்களை உடைய சிற்கள் கப்பிகள் ஆகும்.
2) கப்பிகளை நாம் பின்வரும் வகைகளாக அறிந்து கொள்ள வேண்டும்.
    1) நிலையான தனிக்கப்பி
    2) இயங்கு தனிக்சப்பி
    3) 1-ம் கப்பித் தொகுதி
    4) 2-ம் ,, ,,

### 3) நிலையான தனிக்கப்பி





(a) கிணற்றில் நீர் அள்ள, கொடிக்கம்பங்களில் கொடியை உயர்த்த (சிறிய தேவைகளுக்கு) பயன்படும்
(b) இதன் அறிமுறைப் பொறி முறை நயம் =1 எனவே உண்மைப்பொறி முறை நயம் உராய்வு, கப்பியின் நிறை காரணமாக 1 லும் குறையும் எனவே பொ.மு. நயம் அற்றது
(C) பொறிமுறை நயம் அற்றது எனிலும் ஊக்கவிசையை வசதியான திசையில் பயன்படுத்தலாம் என்பதற்காக பயன்படுகிறது

### 4) இயங்கு தனிக்கப்பி:-




(a) சுமையுடன் கப்பியும் சேர்ந்து இயங்கும்.
(b) இதன் அறிமுறைப் பொறிமுறை நயம் = 2 உண்மைப் பொறிமுறை நயம் 1 லும் கூட 2 லும் குறைவு
(c) உயர்ந்த இடங்களுக்கு சுமைகளை கொண்டு செல்லப்பயன்படும்.
(d) இக்கப்பியைக் கொண்டே 1-ம் கப்பித் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.


### 1-ம் கப்பித் தொகுதி:-





e) பல இயங்கு தனிக் கப்பிகளைக் கொண்டு அமைக்கப்படும் தேவைக்கு ஏற்ப எத்தனை கப்பிகளையும் இணைக்கலாம்.
b) இங்கு ஊக்கவிசையை வசதியான திசையில் பயன்படுத்துவதற்காக ஒரு நிலையான தனிக் கப்பி (A) பயன்படுத்தப்படும் ஏனைய இயங்கு தனிக் கப்பிகள் (B,C,D,) பொறிமுறை நயத்திற்காக இணைக்கப்படும்.
C) இதன் அறிமுறைப் பொறி முறை நயம் 2ⁿம் ஆல் தரப்படும் (n) இயங்கு தனிக்கப்பிகளின் எண்ணிக்கை ஆகும்-

| கப்பியின் எண்ணிக்கை | | பொ. மு நயம் |
|---|---|---|
| 1 | $2^1$ | 2 |
| 2 | $2^2$ | 4 |
| 3 | $2^3$ | 8 |

### 2-ம் கப்பித் தொகுதி




பொ. மு. ந. = 4




பொ. மு. ந. = 3

a) இரு தொகுதிகளாக கப்பிகள் இணைக்கப்படும்
b) மேலுள்ள தொகுதி (A) நிலையாக இருக்க கீழுள்ள தொகுதி (B) அசையும்.
c) மேல் தொகுதியிலும் கீழ்த் தொகுதியிலும் கப்பிகள் சமாலுணீ இணைக்கப்படும் அல்லது கீழ்த்தொகுதியில் மேலுள்ளதினம்க ஒன்று குறைவாக இணைக்கப்படும்.
d) இதன் தத்துவத்திலேயே கிறேன் (சுமைதூக்கி) லிப்ற் (உயர்த்தி) தொழிற்படுகிறது.

# மாகாணசபை முறையை ஒழிக்க முயற்சி எடுப்போம்

## அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு) இனப்பிரச்சினை தீர்விற் இதனை பெறுவது தொடர்

சட்டவிரோத தேர்தல் பிரசாரம்

# தொடர்பு சாதனங்கள் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களுக்கு விரோதமான முறையில் சென்ற பொதுத் தேர்தலின் போது அரசாங்க தொடர்பு சாதனங்கள் மேற்கொண்ட

நேற்றுமுன் தினம் இடம் பெற்றபத்திரிகையாளர் மாநாட்டின்போது உரையாற்றிய அவர் மேலும்கூறுகையில், இவ் விடயம் குறித்து தற்போது லேக் ஹவுஸ் பணிப்பாளர்

## சித்திரம்

ஸீஸ் வரைந்த திர ட்சைப் பழக் குலைக்கு பறவைகள் மயங்கி பறந்து வந்தன என்று கூறப்படுகிறது.

மகா அலெக்ஸசாண்டர், எப்பல்ஸ்டெரியஸ் அரசனின் யுத்தத்தை சுவரில் தீட்டப்பட்டுள்ளது மஞ்சள், சிவப்பு, வெள்ளை நிறங்கள் மட்டும் பாவிக்கப்பட்டுள்ளன. இது அலெக்ஸாண்டர் மெசேயிக் எனப்படும்.

ற்றில்மாடு குதிரைவண்டி கடற்தெய்வம் சரிசுதா ஆகிய உருவங்கள்காணப்படுகின்றன இவற்றில் தலைமயிர் மிகநுணுக்கமான ரேகைளால் செதுக்கப்பட்டுள்ளது. மண்பாண்டம்செய்வதிலும் சிறந்துவிளங்கினர்இதில்யுத்தவீரர், மத குரு இவர்களின் படங்களை வரைந்தனர். இவை 5-ம் நூற்றாண்டுக்குரியதாம் சிற்பங்களைச் செய்வதற்கு சிற்பிகள் சலவைக்கல்லையே பாவித்தனர்.

### அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

வடக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் சிவில் நிர்வாகத்தில் ஆயுதம் தாங்கிய குழுவும் செயற்படுவதை அனுமதிக்கமுடியாது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என உள்நாட்டலுவல்கள் மாகாண சபை கூட்டுறவு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்விற்காகவே மாகாணசபைமுறை கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த சபைகள் இன்று அந்தப்பகுதிகளில் இல்லை. மாகாண சபை முறையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த முறையை மாற்றியமைக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மைபலம் தேவை எமக்கது இல்லை.

இதனை பெறுவது தொடர்பாக இ.தொ.கா உட்பட ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தும் யோசனை எமக்குண்டு. மாகாண சபைக்கு பதிலாக புதிய நடைமுறையை கொண்டுவர பாராளுமன்றில் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

விரோதமான முறையில் சென்ற பொதுத் தேர்தலின் போது அரசாங்க தொடர்பு சாதனங்கள் மேற்கொண்ட பிரசாரங்கள் தொடர்பாக தெளிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் தகவல் சுற்றுலா அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

ட்டின்போது உரையாற்றிய அவர் மேலும்கூறுகையில்,இவ்விடயம் குறித்து தற்போது லேக் ஹவுஸ் பணிப்பாளர் லயனல் பெர்னான்டோவுக்கும் வானொலி, தொலைக்காட்சி பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.

ட்டுள்ளது மஞ்சள், சிவப்பு, வெள்ளை நிறங்கள் மட்டும் பாவிக்கப்பட்டுள்ளன. இது அலெக்ஸாண்டர் மெசேயிக் எனப்படும்.

கிரேக்க கோயில்களின் போதிகைகளில் டொறி அயோனிக் கொிந்தியன் மபுமுரைகள் காணப்படுகின்றன. மற்றும் புடைப்பு முறையானநாணயம்(காசு) இருந்தது. இவந்தனர். இவை 5-ம் நூற்றாண்டுக்குரியதாம் சிற்பங்களைச் செய்வதற்கு சிற்பிகள் சலவைக்கல்லையே பாவித்தனர்.

# பிரதமர் பாதுகாப்பிற்கு இராணுவ அதிரடிப்படை

## மெய்க்காவலர் தொகை குறைக்கப்படும்

(கொழும்பு)

பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பை இதுவரை வழங்கிவந்த விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு (எஸ் ரி.எப்) பதிலாக இராணுவ விசேட அதிரடிப் படை நியமிக்கப்பட்டுள்ளது

முக்கியஸ்தர்களுக்கான பாதுகாப்பு அமைப்பில் புதிய அரசின் நடவடிக்கையின் ஒரு கட்டமாக இம்மாற்றம் இடம் பெற்றுள்ளது பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையின் பாதுகாப்பும் இராணுவ விசேட அதிரடிப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இதேவேளை அமைச்சர்களுக்கு ஒன்பது மெய்ப்பாதுகாவலரும் எம்.பிகளுக்குஇரு மெய்ப்பாதுகாவலரும் என நியமிக்கபடவுள்ளனர் முன்னைய ஐதேக அரசில் சட்டத்திற்கு முரணாக சில அமைச்சர்களுக்கு 20க்கு மேற்பட்ட மெய்ப்பாதுகாவலர் வழங்கப்பட்டிருந்தது

அரசியலில் படையினர் சம்பந்தப்படுவதை தடுக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# குடிசைகள் புனரமைப்பு 3 லட்சம் ரூபா அன்பளிப்பு

## காரைநகர் ப.நோ.கூ சங்கம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களின் குடிசைகளை புனரமைப்பு செய்வதற்கும் புதிய குடிசைகளை அமைப்பதற்கும் காரைநகர் ப.நோ.கூ. சங்கம் 3லட்சம் ரூபா அன்பளிப்பு செய்துள்ளது.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப் பகுதியில் வசித்து வரும் வறிய மக்களின் குடிசைகளை புனரமைப்பு செய்வதற்கும் புதிய குடிசைகளை அமைப்பதற்கும் தீவக இடம் பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகத்தின் ஊடாக இவ் உதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது குடிசை அமைக்கும் வேலைகளை மேற்படி கழகம் மேற்கொண்டு வருகிறது.

தீவக இடம் பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகத்தின் திட்டப்படி 450 வீடுகள் அமைக்கப்பட இருப்பதாகவும் இதில் முதல் கட்டமாக இருபத்தைந்து(25) வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இது மிகவிரைவில் முடிக்கப்பட்டு வறிய மக்களிற்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (88)

# தகுந்த பரிசோதனையின்றி ரிசேர்வ் பொலிஸ் ஆட்சேர்ப்பு

கடந்த இரு வருடங்களில் சரியான சோதனையோ நேர் முகத்தேர்வோ இன்றி 4000 ரிசேர்வ் பொலிசார் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளது. இந்நியமனங்கள் பிரதி பொலிஸ்மா அதிபர்களினதும் அரசியல் வாதிகளினதும் பணிப்பிற்கமைய மேற்கொள்ளப்பட்டதாக ரிசேர்வ் பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த இருவருட நாட்டு நிலைமை காரணமாகஇவ்வாறான அவசர ஆட்சேர்ப்பு நடைபெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார் இவ்வாறு சரியான பரிசோதனையின்றி சேர்க்கப்பட்ட ரிசேர்வ் பொலிசாரை நிரந்தரப்படையில் சேர்க்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அத்த பத்திரிகைக்கு எதிராக காமினி மானநஷ்ட வழக்கு

(கொழும்பு)

எதிர்க்கட்சிதலைவர்காமினி திசாநாயக்கா 'அத்த' எனும் சிங்களப் பத்திரிகைக்கு எதிராக மானநஷ்ட வழக்கு தொடுத்துள்ளார். 10 மில்லியன் ரூபா பணம் மானநஷ்டமாகவும் 5ஆயிரம்ரூபா வழக்குச் செலவாகவும் அப்பத்திரிகையிடம் கோரப்படும் என காமினியின் வழக்கறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி வெளியான அத்தபத்திரிகையில் காமினி திசாநாயக்கா லஞ்சத்திணைக்கள ஆணையாளர் கோப்புகளில் இருந்த விபரங்களை பிரதிஎடுத்ததாதவும் லஞ்ச ஆணையாளர் நேயேல் விஜயநாயக்கவை காமினி இரகசியமாக சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் செய்தி வெளியிட்டிருந்தது.

இதை எதிர்த்தே காமினி தற்போது அப்பத்திரிகைக்கு எதிராக மானநஷ்ட வழக்கு தொடுத்துள்ளார்.

# எரிபொருள் விலைகளும் இருவாரங்களில் குறையும்

டீசல் மற்றும் மண்ணெண்ணெய்ஆகியவற்றின் விலைகளும் அடுத்த இருவாரங்களில் 10 முதல் 25 சதவீதம் வரை குறைக்கப்படும் என உணவு வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த எரிபொருட்கள் மூலம் அரசு இதுவரை 9000 மில்லியன் ரூபா வரியை பெற்று வந்திருக்கிறது. இந்தவரியை அகற்றுவதன் மூலம் இவற்றின் விலை விழ்ச்சியடையும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தவருமான வீழ்ச்சியை ஈடுசெய்வதற்காக வேறு வரிகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவிகள் சாதனை

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி மாவட்டமட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டிகளில் யா/ திருக்குடும்பக் கன்னியர் மட மாணவிகள் பெரும் எண்க்கையான பரிசில்களைத் தட்டிக் கொண்டனர். விபரம்வருமாறு

ஆரம்ப பிரிவுப் பேச்சுப் போட்டியில் செல்வி. சுஜந்தா நவந்தினி மதுரநாயகம் மூன்றாமிடம்.

கட்டுரைப் போட்டியில்செல்வி கார்த்திகா அச்சுதம்பிள்ளை இரண்டாமிடம்.

கீழ்ப்பிரிவுப் பேச்சுப்போட்டியில் செல்வி. காமலின் சுகந்தி யோசவ் இரண்டாமிடம்.

மத்தியபிரிவுப் பேச்சுப் போட்டியில் செல்வி. சியாமி காயத்திரி ஜீவரட்ணம் மூன்றாமிடம்

கட்டுரைப் போட்டியில் - செல்வி. பிரேண்டா எமிலி றோகுணதாசன், பேனடின் பிரபாஜினி றொபின்சன் ஆகியோர் இரண்டாமிடம்.

அதிமேற் பிரிவு பேச்சுப் போட்டியில் செல்வி. சுதாஜினி டொமினிக் இரண்டாமிடம் கட்டுரைப் போட்டியில் செல்வி. அமலராணி ஞானப்பிரகாசம் மூன்றாமிடம்.

வினாடி வினாப் போட்டியில் ஆண்டு - 10 ல் செல்வி. மேரி சுஜாந்தினி லூசியன் இரண்டாமிடம்.

ஆண்டு - 13 ல் செல்வி. அமலராணி ஞானப்பிரகாசம் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

அச்சங்கள் கற்பனை செய்யும் பயங்கரங்களைவிட குறைவானது.

- ஷேக்ஸ்பியர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 31-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் 05

## முட்டுக்கட்டைகள்

போர் நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாக புதிய அரசாங்கத்தின் முயற்சிக்கு இரண்டாவது எதிர்ப்பு இராணுவத் தரப்பில் இருந்து கிளம்பியுள்ளது. இவ் எதிர்ப்பு எதிர்பார்க்கப்பட்டது போன்றே பிரதான முட்டுக்கட்டைகளில் ஒன்றாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இராணுவத் தரப்பில் இருந்து எழுந்த இவ் எதிர்ப்பானது, பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவினால் சமாளிக்க முடியாத அளவிற்கு பலமானதாக இருப்பதாகத் தெரிகின்றது இந்த நிலையிலேயே பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா முப்படைத் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு தமது நிலைப்பாட்டை நேரடியாகவிளக்கவேண்டிய அவசியமும் எழுந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதில் இராணுவத்தினருக்கு ஆட்சேபம் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதில் ஒன்றாக இராணுவத்தினர் தோல்வியை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் அதாவது இராணுவத்தினரால் முடியாத நிலையிலேயே அரசியல் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர்களால் ஜீரணிக்கவோ அன்றி ஏற்றுக் கொள்ளவோ முடியாது போகலாம்.

இவ்விடயம் ஓரளவிற்கு சுட்டிக்காட்டப்பட்ட தொன்றாகவும் உள்ளது என்றே கூற வேண்டியுள்ளது. பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற சிரேஷ்ட அதிகாரிகள் சந்திப்பொன்றில் பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் ஏற்பட்ட பின்னடைவுகளையும், அதே காலத்தில் இராணுவத்தரப்பில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் ஒப்பு நோக்கியே வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு அரசியற் தீர்வு காணும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் மூலம் முன்னேற்றத்தை விட பின்னடைவுகளே அதிகம் என்பதை அவர் மறைமுகமாக சுட்டிக் காட்டியமை தெரிகின்றது. இல்லாது போனால் அதாவது முன்னேற்றமே அதிகம் என்றால் அவர் ஏன் யுத்தத்தைவிட்டு பேச்சுவார்த்தையையும், அரசியற் தீர்வையும் நாட வேண்டும்? இந்நிலையில் இராணுவம் தோல்வியை ஒப்புக் கொண்டு அரசியற் தீர்விற்கு ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்ப்பது கடினமே.

இது ஒரு புறம் இருக்க யுத்தம் என்பது நேற்று

# திருமதி செல்லச்சாமியும் இ.தொ.காவினால் நீக்கம்

### கணவனுக்கு உடந்தையாக செயற்பட்டாராம்

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் உறுப்பினராக இருந்த இ.தொ.கா உறுப்பினர் திருமதி வேலம்மாள் செல்லச்சாமி கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கட்சியிலிருந்து ஏற்கனவே நீக்கப்பட்ட எம்.எஸ் செல்லச்சாமியின் மனைவி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினராக உள்ள செல்லச்சாமி அக்கட்சி பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டபோது திருமதி செல்லச்சாமியும் அவருக்கு உடந்தையாக இருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரசின் விதிமுறைகளை மீறிவிட்டதாக இ தொ.கா குற்றஞ்சாட்டியுள்ளது. இ தொ. காவின் பொதுச் செயலாளராக இருந்து எம், எஸ் செல்லச்சாமி அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்தார்.

தற்போது பதவி நீக்கப்பட்ட திருமதி வேலம்மாள் செல்லச்சாமியின் இடத்திற்கு அவரின் மகனான ஜெகதீஸ்வரன் செல்லச்சாமி மேல் மாகாணசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# நவம்பர் 3ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதம் மூன்றாம் திகதி நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது என 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் மனுத்தாக்கல் செப்டெம்பர் மாதம் 22-ம் திகதி நடைபெறும் என்றும் இதற்கான ஆயத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர், ஜனாதிபதித் தேர்தலை நடத்த தயாராக இருந்தமையினால், எப்போதும் தேர்தலை நடத்த முடியும் என தேர்தல் ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பிரேமதாச உடுகம்பொல அஷ்ரப்பால் வெளியேற்றம்

(கொழும்பு)

கப்பல் போக்குவரத்து, துறைமுக அமைச்சராக எம்.எச்.எம். அஷ்ரப் தனது அமைச்சில் பொறுப்பேற்றபோது அவ்வைபவத்தில் கலந்துகொண்ட முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரும், துறைமுக அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளருமான பிரேமதாச உடுகம்பொல அஷ்ரப்பால் வெளியேற்றப்பட்டார்.

மேற்படி வைபவத்தில், உடுகம்பொலகலந்துகொண்டபோது உத்தியோகத்தர்கள், கொலையாளியே வெளியேறுக என உடுகம்பொலவை பார்த்து கோஷமெழுப்பினர்.

இதனையடுத்து, அமைச்சர் அஷ்ரப், உடுகம்பொலவை வெளியேறுமாறு பணித்தார் இதையடுத்து உடனடியாகவே உடுகம்பொல வெளியேறினார் இச்சம்பவத்தின் பின் உடுகம்பொல, துறைமுக அதிகார சபைக்கு கடமைக்குச் செல்லவில்லை எனவும் தெரிய வருகின்றது.

# இரகசிய தடுப்பு முகாம்கள் படையினரிடம் இல்லை

### இராணுவ தளபதி மறுப்பு

(கொழும்பு)

கொழும்பில் இராணுவத்தினர் எந்த இரகசிய தடுப்பு முகாம்களையும் வைத்திருக்கவில்லை என இராணுவத் தளபதி ஜெரிடிசில்வா மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தலைவர் ஜே எப். என். சூசாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தூதரகத்திற்கு பின்பாகவும் மேலும் சில இடங்களிலும் படையினர் இரகசியமான முறையில் தடுப்பு முகாம்கள் வைத்திருப்பதாக மனித உரிமை செயலணிக் குழுவின் தலைவர் இராணுவத் தளபதிக்கு எழுதிய கடிதத்திற்கு பதிலாகவே இராணுவத்தளபதி இவ்வாறு தனது பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் அமைச்சரின் வீட்டிற்கு துப்பாக்கிச் சூடு

### பாதுகாவலர் பலி

முன்னாள் ஐ தே. க. அமைச்சர் காமினி லொக்குகேயின் பிலியந்தல வீட்டில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாகவும் இதில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் மரணம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இராணுவ உடையணிந்து ஆட்டோ ஒன்றில் வந்தவர்களினால் இத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், தற்போது இவ் ஆட்டோ பிலியந்தல பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# சர்வதேச அவதானிகளுக்கு 10 மில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலை கண்காணிக்க வந்த 44 பேர் கொண்ட சர்வதேச கண்காணிப்புக் குழுவிற்கு பத்து மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாக அரசு செலவிட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இதைவிட தேர்தலுக்காகவும் 40 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இத்தேர்தல்கண்காணிப்புக் குழுவினர்தேர்தலன்று மொத்தம் 9579 வாக்களிப்பு நிலையங்களில் 800 வாக்களிப்பு நிலையங்களுக்கு மட்டுமே விஜயம் செய்ததாக கூறப்படுகிறது. இவர்களுக்கான விமானப்பயண செலவு, ஹோட்டல் செலவு, உணவு என்பவற்றுக்காக பத்துமில்லியன் ரூபாவுக்கு அதிகமாக செலவு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இவர்கள் உல்லாசப்பயணிகளாகவே வந்தார். ஒழிய உண்மையில் தேர்தல் நடவடிக்கைகளை இவர்கள் கண்காணிக்கவில்லை என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தனா குற்றஞ்சாட்டியுள்ளார்.

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இதுவரை கைதாகவில்லை

(கொழும்பு)

ஜாஎலை பொலிஸ் பகுதியில அசிட் வீச்சு தொடர்பாக தேடப்பட்டு வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜயந்த சில்வா இதுவரை கைது செய்யப்படவில்லை. என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இவர் தேர்தல் முடிவடைந்ததைத்தொடர்ந்து இதுவரை கடமைக்குச் சமுகம் தரவில்லை என்றும் கூறப்படுகிறது. இவருக்கு உடந்தையாக செயல்பட்ட முன்னாள் அமைச்சர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆளும் கட்சியுடன் விசேடமாக உறவைப் பேணுவோம்

### - இ. தொ. கா. தலைவர் தொண்டமான்

(கொழும்பு)

இழுபட்டுச் செல்லும் இனப் [illegible]

ட்டார்.

தோட்டத் தொழிலாளர் [illegible]

என்ற விடயத்தை நாம் ஏற் [illegible]

# றோகணவின் கொலைபற்றி விசாரிக்க [illegible]

தத்தைவிட்டு பேச்சுவார்த்தையையும், அரசியற் தீர்வையும் நாட வேண்டும்? இந்நிலையில் இராணுவம் தோல்வியை ஒப்புக்கொண்டு அரசியற் தீர்விற்கு ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்ப்பது கடினமே.

இது ஒரு புறம் இருக்க யுத்தம் என்பது நேற்று இதே பகுதியில் குறிப்பிட்டது போன்று தனியாக அரசியல் வாதிகளுக்கும் சிவில் அதிகாரிகளுக்கும் மட்டுமல்ல படைத்துறை உயர் அதிகாரிகளுக்கும் பொன் முட்டையிடும் வாத்தே ஆகும். இதில் ஆயுதக் கொள்வனவு கமிஷனில் இருந்து, வடபகுதிக்கும் பொருள்களை அனுமதிப்பது மற்றும் ஆயுதப் படைக்கான பெருந்தொகை நிதி ஒதுக்கீட்டைக் கையாள்வது, உயர்ந்த பட்ச சம்பளம், அலவன்ஸ், மேலதிக வேலை நேரப்படி என அவர்களின் வாழ்க்கையை செழிப்பாக்கும் ஒரு நடவடிக்கையாகும். இந்நிலையில் யுத்த நிறுத்தம், பொருளாதாரத்தடை நீக்கம் என்பவை அமுல்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களின் செழிப்பான வாழ்விற்குக் குந்தகம் ஏற்படலாம். இதனால் இது இலகுவில் அவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கமாட்டாது.

இவை தவிர ஏற்கனவே இராணுவத்திற்குள் இருக்கும் அதிகாரப் போட்டியானது அரசாங்க மாற்றத்தால் இன்னமும் தீவிரமாகியிருப்பதற்கான வாய்ப்புக்களே அதிகமாகும். கடந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் புறம் தள்ளப்பட்ட / ஓரங்கட்டப்பட்ட அதிகாரிகள் பலர் தற்பொழுது புதிய அரசாங்கத்திற்கு ஆதரவை வழங்க முன்வந்தாலும் இன்னமும் ஆயுதப்படையினரின் தலைமை ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டவர்களிடமே உள்ளது. இந்நிலையில் பொ. ஐ முன்னணியின் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு கிடைப்பதில் தடங்கல் எழுவது இயற்கையே.

அதேவேளை சிறிலங்கா அரசியலமைப்பில் இன்று அதிகாரம் யார் கையில்? ஆட்சியாளர்கள் யார்? என்பது குறித்து ஏற்பட்டுள்ள குழப்பம் இராணுவத்தினரையும் பாதிக்காமல் இருக்கப் போவதில்லை. இந்நிலையில் யார் சொல்லைக் கேட்பது? யார் பின்னால் செல்வது என்பது குறித்தும் இராணுவத்தரப்பில் குழப்பம் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

இந்நிலையில் பொருளாதாரத்தடை, யுத்தம் நிறுத்தம் தொடர்பான விடயத்தில் இராணுவத் தரப்பில் இருந்து எழுந்துள்ள முரண்பாடு / முட்டுக்கட்டை என்பவை ஆச்சரியமளிக்கக் கூடியவை அல்ல. இவையாவற்றிற்கும் மேலாக சிறிலங்காவின் ஆயுதப்படையானது 1977இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பதவி விலகிய போது இருந்த பலவீனமான, ஒரு சம்பிரதாய பூர்வ நிகழ்ச்சிகளுக்கு மட்டும் அழைக்கப்படும் ஒரு அலங்கார அமைப்பும் அல்ல. இன்று ஒரு பலம் பொருந்திய, தேசிய வருமானத்தில் 7 வீதத்திற்கு மேல் நுகரும் ஒரு முக்கிய பிரிவாகும். இந்நிலையில் இதனைப் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் மிகவும் திறமையாகவும், நுட்பமாகவும் கையாள வேண்டும் இல்லாது போனால், அதுவே இவர்கள் ஆட்சிக்கு உலைவைத்து விடவும் கூடும்.

- இ. தொ. கா. தலைவர் தொண்டமான்

(கொழும்பு)

இழுபட்டுச் செல்லும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதமர் சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதை நான் ஆதரிக்கிறேன் என இ. தொ. கா தலைவர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார இதழ் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த பின்பே யாருக்கு ஆதரவளிப்பது என முடிவு செய்வேன் என்றும் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்கள் குறித்த சந்திரிகாவின் அறிவிப்புகள் வரவேற்கக்கூடியதாக உள்ளது. எனினும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் புதிய நிர்வாகஅலகுகளை அமைத்து வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். இது முற்றாக பிரச்சினையைத் தீர்க்கும் என நான் கருதவில்லை. ஆனால் பிரச்சினையைத் தீர்க்க சந்திரிகா விரும்புகிறார் என்ற விடயத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம் புதிய திட்டங்களுடனான அணுகுமுறை ஒரு வகையான தீர்வைத்தரலாம் சில சமயம் அதுவே பாதகமாகிவிடலாம்.

இதுவரை நான் சந்திரிகாவை சந்தித்துப் பேசவில்லை தேவையேற்படின் நான் சந்திப்பேன் நாம் தொழிற்சங்கத்தினர் இம்முறை ஆளும் கட்சியுடன் விசேடமாக உறவை வைத்துக் கொள்வோம் என்றும் தொண்டமான் அப்பேட்டியில் குறிப்பிட்டார்

# பொருளாதாரத் தடை நீக்கம் மக்ஸ் பேர்கர் கோரிக்கை

## பிரதமர் சந்திரிகாவுக்கு கடிதம்

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதார தடையை நீக்குமாறு கனேடிய வழக்கறிஞரான மக்ஸ் பேர்கர் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தத்தடையை அகற்றுவதன் மூலம் நாட்டில் உள்ள பல தடைகள் நீங்கும் எனவும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றது குறித்து பாராட்டுகிறேன். தமிழர்கள் பிரச்சினையை தீர்க்குமுகமாக அவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளதாக நீங்கள் அறிவித்தமை குறித்து கனடாவில் உள்ள தமிழர்கள் மட்டுமல்ல இங்குள்ள கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்களும் கனேடிய மக்களும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். நீங்கள் சமாதானத்தை உருவாக்க உங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நல்லெண்ண வெளிப்பாடாக உங்கள் அரசு வடபகுதி மீதான பொருளாதார தடையை நீக்குங்கள் உங்கள் அரசின் சரியான முடிவுகளை எதிர்பார்த்துள்ளேன் என மக்ஸ் பேர்கர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மனநோயாளர் பிரிவிற்கு இலங்கை வங்கி உதவி

இலங்கைவங்கி சுன்னாகம் கிளையின் வெள்ளி விழாவினை முன்னிட்டு வங்கியின் விளையாட்டு நலன்புரிச்சங்கம் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையின் மனநோயாளர் பிரிவு கட்டடத்திற்கு பத்தாயிரம் ரூபா செலவில் வர்ணம் தீட்டியுள்ளது.

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையின் முகாமையாளர் திரு. எஸ். விக்னராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைவங்கி யாழ். பிரதேச முகாமையாளர்கள் திரு. எம் சண்முகசுந்தரம் திரு கே. கணேசமூர்த்தி ஆகியோர் முறையே மேற்படி பத்தாயிரம் ரூபாவினையும் மாதாந்த உதவியாக கொடுக்கப்படும் முந்நூறு ரூபாவினையும் கையளித்தனர்.

மேற்படி வங்கியில் பணிபுரியும் 30 ஊழியர்களும் தலா 300 ரூபா வீதம் இந்நிதிக்கு பணம் வழங்கியுள்ளனர். இதேவேளை இவர்கள் மாதாந்தம் ஒவ்வொருவரும் தலா 10ரூபா வீதம் 300ரூபாவினை திரட்டி மாதாந்தம் செலவுகளுக்காக இந்த மனநோயாளர் விடுதிக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# றோகணவின் கொலைபற்றி விசாரிக்க குழு வேண்டும்

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, மற்றும் லலித் அத்துலத்முதலி, விஜேயகுமாரணதுங்கா ஆகியோரின் கொலைகளை விசாரிக்க விசாரணை கமிஷன்களை அமைக்க முன்வந்த பிரதமர் சந்திரிக்கா குமாரணதுங்கா றோகண விஜேவீரவின் கொலை பற்றியும் விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பல தரப்பிலிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

# சந்திரசேகரனின் தெரிவு விபத்தென வர்ணிப்பு

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 75,000 முதல் ஒரு லட்சம் வரையிலான விருப்பு வாக்குகளைப் பெற்றும் பாராளுமன்றம் வர முடியவில்லை. ஆனால் சுமார் இருபத்து நாலாயிரம் வாக்குகளுடன் மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரன் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது ஒரு விபத்து இவ்வாறு இ. தொ. காவின் தலைவரும், தேசிய பட்டியலின் மூலம் பாராளுமன்ற உறுப்பினருமான சௌ. தொண்டமான் கூறியுள்ளார்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், சந்திரசேகரனின் வெற்றி இ. தொ. காவைப் பாதிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் சிறுபான்மையினரின் பிரதிநிதியாகஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் ஒரு முட்டாள் அல்ல எனவும் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

## பெற்றுக் கொள்ளவும்

மகேந்திரா வீதியில் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 31

### புதன் இரவு

08. 01 - குயிலோசை-கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நாட்டுப்புறக் கலைகள்

08. 20 - ஏர்முனை-''பயிர் நடுகைமுறைகள்' கேள்வி பதில்

08. 30 - செய்திகள்

08. 40 - எல்லாளன் நாடகத்தின் தொடர்ச்சி.

### 1994. 09. 01

### வியாழன் காலை

07. 02 - மாவீரவணக்கம்

07. 15 - விடுதலை கீதங்கள்

07. 30 - செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



## வரவு செலவுத் திட்டம் பெப்ரவரியில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருந்த 1995ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அடுத்த வருட ஆரம்பத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளில் புதிய அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது

அதே வளை இடைக்காலத்திற்கான ஒரு வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பாக நிதி அமைச்சில் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது.

நவம்பர் மாதத்தில் ஜனாதிப தேர்தல் நடைபெறஇருப்பதனால் பாராளுமன்றக் கூட்டத்தொடரை தொடர்ந்துநடத்துவதில் பல தடங்கல்கள் ஏற்படும் என்றும் எனவே தான் இம் முடிவை தாம் எடுத்துள்ளதாகவும் நிதி அமைச்சின் உயர் அதிகாரி 'திவயின' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்'

அநேகமாக பெப்ரவரி மாதம் வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றம் சமர்ப்பிப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ. தே. க. தொண்டர்மீது தாக்குதல் என புகார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் தொண்டர்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தவறிவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது

அக்கட்சியின் சார்பில் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது! தேர்தலுக்குப் பின்னர் நடந்த வன்முறையில் ஐ. தே. கவை சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஒவ்வொரு நாளிலும் தமது ஆதரவாளர்களின் கண்கள் கட்டப்பட்டு வேறு இடங்களுக்கு கடத்தப்படும் புகார்கள் வருவதாகவும் இத்தகைய புகார்களில் இதுவரை 200 புகார்கள் கிடைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது

ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசகரா செய்தியாளர்களிடம் இதனை வெளியிட்டார். புதிய அரசுக்கு எதிராக ஐ. தே. க. சுமத்தியுள்ள முதலாவது குற்றச்சாட்டு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவுக்கு ஒத்துழைக்க ஈ.பி.டி.பிக்கு ஆயுதம்

சென்ற பொதுத்தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஈ.பி.டி.பிக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீன தயாரிப்பான ரி.81 இன 121 இயந்திர துப்பாக்கிகள் வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## ஐ. தே. கவிலிருந்து விலக அனுரா திட்டமாம்

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து அனுரா பண்டார நாயக்கா விலக இருப்பதாக, கட்சி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

அவர் அரசியலை விட்டு விலகி வெளிநாடொன்றுக்கு செல்லத் திட்டமிட்டுள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

## ஆயுத கோஷ்டியினால் புத்தர் சிலை கொள்ளை

பௌத்த விகாரை ஒன்றிற்குள் பலாத்காரமாகப் புகுந்த ஆயுதம் தரித்த ஒரு கோஷ்டியினர் ... சிலைகள் தங்க நகைகள் மற்றும் சுமார் நாலாயிரம் ரூபா ரொக்கப் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச்சென்

## வைத்தியபீட மாணவர் தொகை 200ஆல் அதிகரிக்க நடவடிக்கை

வைத்தியபீடங்களுக்கு அனுமதிக்கப்பட இருக்கும் மாணவர்களின் தொகை அடுத்த வருடம் முதல் இருநூறால் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை உயர் கல்வி அமைச்சு எடுத்துள்ளது எனவும்,

இதற்கான ஓர் உப குழுவை கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன நியமித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதி வசதி குறைந்துள்ளமையினால் மேலதிக வைத்திய மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள்தெரிவித்ததைத் தொடர்ந்து விடுதி வசதி தொடர்பாக பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை போதனா வைத்தியசாலைகளில் பயிற்சி மாணவர்களுக்கு ஏற்படும் கால தாமதத்தைக் குறைப்பதற்கும் ஒரே நேரத்தில் கூடுதலான வைத்தியபீட மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும் சுகாதார அமைச்சருடன்கல்வி அமைச்சு பேச்சுவார்த்தைகளை நடத்த இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## காமினிக்கு வாக்களித்தோருக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம்

எதிர்க்கட்சித் தலைவராக போட்டியிட்ட காமினி திசாநாயக்கா, தனக்கு சார்பாக வாக்களித்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ஒரு இலட்ச ரூபா அளித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது,

ஐக்கிய தேசியக்கட்சி செயற்குழு உறுப்பினர்களை கொழும்பிலுள்ள வீடொன்றில் சந்தித்த காமினி திசாநாயக்கா, உறுப்பினர்களுக்கு இவ்விதம் அறிவித்ததாகவும், பின்னர், தனித்தனியேயும் உறுப்பினர்களை சந்தித்ததாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## முன்னாள் அமைச்சர் வாகனங்களில் ஜே.வி.பி. சுவரொட்டிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் அமைச்சர்களின் வாகனங்கள் சிலவற்றில் ஜே.வி.பி. இயக்க சுவரொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியகட்சி சுவரொட்டிகளும், அதற்கு ஏற்றாற்போல அச்சிடப்பட்ட ஜே.வி.பி சுவரொட்டிகளும் கணிசமான அளவு அவ்வாகனங்களில் காணப்பட்டுள்ளன.

முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சரின் வாகனங்களில் இச்சுவரொட்டிகள் இருந்ததாக மீன்பிடித்துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சந்திரிகா குமாரணதுங்காவுக்கு தொண்டமான் புகழாரம்

### இதுபோல் தலைவி இதுவரை இல்லையாம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ளது. தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முன்வந்துள்ளது. எனவே இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்போவதாக இ. தொ. கா தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சௌ தொண்டமான் கூறியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு நேற்று தமது 82ஆவது பிறந்த தினத்தையொட்டி விசேட பேட்டி ஒன்றை வழங்கிய அவர் மேலும்கூறுகையில் தற்போது நாட்டில் புதிய சூழ்நிலை தோன்றியிருக்கிறது இது போன்ற சூழ்நிலை முன்பு நிலவியது கிடையாது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பிரதமர் திருமதி சந்திரிகா பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ளார் திருமதி சந்திரிகா போன்ற ஒரு தலைவி இதுவரை இருந்ததில்லை எனவும் தெரிவித்தார்

அத்துடன் பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மேலும் கூறுகையில் இ, தொ, கா, ஐ, தேகவின் சின்னத்தில் போட்டியிட்டபோதும் அதன் தயவில் தங்கியிருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்

## அமெரிக்கா, கனடாவை ஒத்த

## முன்னாள் அமைச்சர் ஒரு கோடி பண மோசடி

(கொழும்பு)

தென்கொரிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபா பணத்தை முன்னாள் அமைச்சர் ஒருவர் முழுமையாக தனிப்பட்ட செலவுகளுக்கு பயன்படுத்தி வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு உதவிவந்த சிரேஷ்ட அதிகாரி தொடர்பான தகவல்களும் தற்போது கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பணம் தொடர்பா... திறைசேரிக்கோ அல்ல... சமூகசேவை அமைச்சுக்கோ... தெரிவிக்கப்படாமல் இ... மையும் தற்போது கண்... க்கப்பட்டுள்ளதாக ... கூறப்படுகிறது.

ஊழல், அதிகார ... யோகம் தொடர்... ஆணைக்குழு அமை... இன்னும் ஒரு சில ... களே இருக்கையில் ... வல் வெளிவந்துள்ளன... ப்பிடத்தக்கது.

## நீதி சேவை ஆணைக்கு... செயலர் தப்பி ஓட்டம்

பண மோசடி தொடர்பாக தேடப்பட்டு வந்த நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் லால் பீரிஸ் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபா ஊழல் தொடர்பாக இவர் கைது செய்யப்பட இருந்தார் என்றும், இதனால் கடந்த 2... திகதி நாட்டைவிட்டு ... யேறியுள்ளார் எனவும் ... வருகின்றது.

## நாடு திரும்பி...

(கொழும்பு)

பிரதமர் சந்திரி... ரணதுங்காவின் பி... இருவரும் நேற்று ... நாடு திரும்பியதாக ... வருகின்றது.

---

நோயாளர்

தண்ணீருடன் அன்று காலை 6. 30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (சி)

---

அரசாங்கத்தின்

தினரிடம்இருப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் சட்டபூர்வமாக மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கவே இராணுவம் இருக்கிறது. எனவே அரசாங்கம் எதனைத் தீர்மானிக்கிறதோ அதனையே இராணுவம் செய்யும் என அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

இதேவேளை யுத்த நிறுத்தம், பொருளாதார தடை நீக்கம் தொடர்பாக இராணுவ அதிகாரிகளை பிரதமர் சந்திரிகா சந்திக்கும் போது நீங்கள் என்ன கருத்தைக் கூறுவீர்கள்? எனக் கேட்டபோது இதற்கு தான் எந்தவித கருத்தையும் கூறமுடியாது என்றும் இராணுவத் தளபதியே இதற்கான கருத்துக்களைத் தெரிவிக்க முடியும் என்றும், இராணுவத் தளபதி கூறும் கருத்துக்களுக்குத் தாம்அனைவரும் கட்டுப்பட்டவர்கள் எனவும் அவ் அதிகாரி கூறினார்.

---

40 மில்லியன்

தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்ன... பாராளுமன்ற உறுப்பி... ளும், திணைக்களத் தல... ர்களாலும் வெளிநாடுகளி... ருந்து தருவிக்கப்பட்ட, 3... சொகுசு வாகனங்களை, விசாரணைகள் முடியும் வரை... வெளிச்செல்ல அனுமதிக்க... வேண்டாமென சுங்க... திணைக்களத்தை கப்ப... போக்குவரத்துத் து... அமைச்சர் எம். எச் எம். அ... ரப் கேட்டுள்ளார்-

---

சமாதான

டிக்கை மேற்கொள்வது மூலம் சர்வதேசரீதியில் இலங்கையி... புகழுக்கு களங்கம் ஏற்படும் எனவும், கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படும் ... தெரிவித்தார்.

அத்துடன் தீவிரமான... சுவார்த்தைகளை ... வடக்கு-கிழக்குபிரச்சி... தீர்வுகாண உதவி வழ... நாடுகள் மற்றும் அ... கள் நிர்ப்பந்திப்பத... குறிப்பிட்டார்.

இதனாலேயே ரஷிய ... கொள்வனவு விவகார... நடவடிக்கை எடுக்க அ... முற்பட்டுள்ளது என... கொழும்பிலிருந்து வெளிவ... அரசசார்பு பத்திரி...

## புத்தர் சிலை கொள்ளை

பௌத்த விகாரை ஒன்றிற்குள் பலாத்காரமாகப் புகுந்த ஆயுதம் தரித்த ஒரு கோஷ்டியினர் அங்கிருந்த பௌத்த மத குருமார் பலரையும் தடுத்து வைத்துவிட்டு விகாரையிலிருந்த புத்தர் சிலைகள் தங்க நகைகள் மற்றும் சுமார் நாலாயிரம் ரூபா ரொக்கப் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச்சென்றுள்ளனர். இது குறித்து பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளை சமாளிக்க

# 70 ஆமட் கார்கள் கொழும்பு சென்றன

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னரான பதற்ற நிலையை சமாளிக்கவென, 70 ஆமட் கார்கள் கொழும்பு நகருக்கு வரவழைக்கப்பட்டிருந்தன என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், இதுபோன்ற இருநூறு யுத்தவாகனங்கள் வரை கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், இவற்றில் பதினாறு வாகனங்கள் வரை மீள அந்தந்த இடங்களுச்கு அனுப்பப்படவில்லை எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30 மணிக்கு மட்டும்

BRUCE LEE, CHUCK NORRIS

நடித்த

WAY OF THE DRAGON

கராட்டிப் படம்

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

CIRCUS

ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின்மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும் பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!

(சி-10173)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் டணிமனையில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அமெரிக்கா, கனடாவை ஒத்த புதிய அரசியலமைப்பு தேவை

## அமெரிக்க ஈழத் தமிழர் சங்கம் அறிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்க, கனேடிய அரசியலமைப்பை ஒத்ததாக அரசியல் பரவலாக்கலை செய்வதற்கு ஏதுவாக புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்காக மாத்திரமே குழு நியமிக்கப்படல் வேண்டும். அதிகாரபரவலாக்கலை விரைவில் செய்யத் தவறினால் அது ஈழத்தை யதார்த்தமாக்கிவிடும் என அமெரிக்க - ஈழத் தமிழர் சங்கம் சிறிலங்காவின் புதிய அரசிற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இன அமைதியையும் புனர் நிர்மாணத்தையும் நோக்கி துணிச்சல் மிகு பயணத்தை ஆரம்பித்திருக்கும் இலங்கையின் புதிய தலைவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை வாழ்த்துகிறோம்.

ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் மாண்டு போகவும் கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள் நாசமாகவும் காரணமாயிருந்த போர் வெறியர்களையும் தீவிர பேரினவாதிகளையும் தோற்கடித்த இலங்கை மக்களின் விவேகத்தை நாம் மெச்சுகின்றோம்.

இலங்கையின் புதிய தலைவர் நீட்டியிருக்கும் சமாதானக் கரத்தை ஏற்பதற்கு முன்வந்திருக்கும் விடுதலைப் புலிகளின் துணிச்சலையும் நாம் பாராட்டுகின்றோம்.

அதிகாரப் பரவலாக்கலை செய்வதற்சேதுவாக அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை. இது விடயத்தில்இலங்கையின்புதிய பிரதமருக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் ஆதரவை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

### மர்மப்

வயது - 07 ஆகியோரே மேற்படி வெடி விபத்தில் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இவர்களில் ஞானபாலன் றவிவர்மன் என்னும் சிறுவன் மிக கடுமையான காயங்களிற்கு உள்ளாகியுள்ளார். (88)

### சதிப்புரட்சி

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம மஜர் மல்லிமாராய்ச்சி, யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் சரத் பொன்சேகா, யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பதாவது படைத்தளபதி கேணல் காமினி குணசேகர ஆகியோரே இச்சதி முயற்சியில் ஈடுபட்டார்கள் எனவும் தெரிய வருகின்றது.

### ஆட்சி

திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகளை அவகள் ஆராய்ந்ததாகவும், இரவு முழுவதும், தலைமை அலுவலகத்திலேயே தங்கியிருந்து இராணுவ அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்ததாகவும், இதனால் இச்சதித் திட்டம் பிசுபிசுத்துப் போனதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### மாகோ

டது.

மேற்படி சீனி மூடைகள் யாவும் அளவிடப்பட்ட பின்னரே புனர்வாழ்வு பிரிவினர் கையேற்று விநியோகம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி, சி, பா)

### ஹமில்டன்

ணுவத் தளபதியாக லக்கி அல்கமவையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட இருந்தது.

ஜனாதிபதி இவ் வேண்டுகோளை நிராகரிக்கும் பட்சத்தில், ஐ.தே.க உயர்தலைவர்களின் தலையீட்டைக் கோருவதாக இருந்தது இதற்காக, மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பலதடவைகள், ஐ.தே.க. உயர்தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இத்திட்டத்தில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும் குறிவைக்கப்பட்டு இருந்தார் எனவும் விசாரணைகளின்போது மேலும் தெரியவந்துள்ளது.

### ஆயுதப்

ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாநாட்டின்முன்னோடியாக இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா இவர்களை இன்று 31ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

### புலிகளுடன்

தம் கொடுக்கலாம் என கருதுகின்றனர் என அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விசேட

ட்ட செயலகத்தில் நடைபெறும் விசேட கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இராணுவத் தளபதி கூறும் கருத்துக்களுக்குத் தாம்அனைவரும் கட்டுப்பட்டவர்கள் எனவும் அவ் அதிகாரி கூறினார்.

### மோட்டார்

1994 ஆம் ஆண்டு வரி அட்டை இன்றி வீதிகளில் பாவிக்கப்படும் மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர் மீது தமிழீழ காவல்துறையினரும், மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்டநடவடிக்கை மேற்கொள்வர் என மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

இதனாலேயே ரஷிய ஆ... கொள்வனவு விவகாரத்... நடவடிக்கை எடுக்க அ... முற்பட்டுள்ளது என... கொழும்பிலிருந்து வெளி... அரச சார்பு பத்திரி... கூறியுள்ளன.

### மீனவரை

மீனவர்களை 'டோறா' ப... கில் வந்த கடற்படையி... தாக்கியதையடுத்து மீன... கள் பெரும் பதற்றமடை... னர். இத் தாக்குதலு... அஞ்சி மீனவர்கள் தமது... பிடி பொருட்களை கட... கைவிட்ட நிலையில் நீ... கரைசேர்ந்தனர்.

ஏற்பட்ட சேதவிபரங்... பற்றி தகவல்கள் எது... கிடைக்கவில்லை. (...

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா நாகலட்சுமி

(மண்டைதீவு, 2 ம் வட்டாரம்)

மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் சா... கச்சேரி நுணாவில் கிழக்கில் வசித்தவருமான திரும... கந்தையா நாகலட்சுமி 30-8-94 செவ்வாய்க்கிழமை... காலமானார். அன்னார் வேலுப்பிள்ளை கந்தைய... வின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிருஸ்ண... செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், வைகுந்... ராஜா, வைபோகராஜா, சச்சிதானந்தசிவலட்சு... (ராணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேம்ப... மலர், சகுந்தலாதேவி, பேரின்பநாயகம் (குணம்) ஆ... யோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற த... செயன், துரைசிங்கம், மகாதேவா, அணிகலம்... யோரின் அன்புச் சகோதரியும், றஜனிகாந்த், சசி... வைலஜா, சிந்துஜா, கஜிதா, உபேந்திரன், உசா... சபிதா, தனுஜா, சரண்யா ஆகியோரின் ... பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள்... புதன் 31-8-94 அன்னாரின் இல்லத்தில் நடை... பிற்பகல் 2 மணியளவில் கண்ணாடிப்பிட்டி மய... தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை... றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. வைகுந்தராஜா
(மகன்)

சங்கம் ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(9247)